Wash the vegetables and cut them to small pieces. Heat about three ollocks of water. Add the corn pieces first, then the salt, a pinch of saffron powder, and later to the half boiled corn pieces the tomatoes. Boil well. Add the dhal and a little more of water and boil again for a few minutes. Add the ground paste mixed with three teaspoons of rice flour in half an ollock of water. Boil for a couple of minutes and complete the process as before.

Tomato Sambar.

Ripe tomatoes—20 palams; chillies—10 Gingelli oil—12 teaspoons, Mustard—1 teaspoon, Venthayam—1 teaspoon; Rice flour—3 teaspoons, Salt—4 teaspoons; Boiled dhal—1½ ollock; a little asafoetida, coriander leaves and bay leaves.

Wash the tomatoes, warm the vessel with the oil. First fry the asafoetida; then add the chillies, venthayam and mustard—wait till the mustard ceases to crackle, add the tomatoes, boil for a short while. Pour nearly three ollocks of water, add the salt and boil well till the tomatoes crackle and shrink. The boiled dhal should now be added and the boiling continued a little longer. Add coriander and bay leaves and remove from oven.

Tomato Rasam:—Tomatoes (ripe)—1 pound, Rasapodi—2 teaspoons, coriander seeds fried and ground into a paste with a few pepper—1 teaspoon. Salt—2 to 3 teaspoons, Boiled dhal—1½ ollock; Mustard—1 teaspoon; Asafoetida, coriander and bay leaves.

Wash the tomatoes. Heat two ollocks of water the rasapodi and salt to boiling in a vessel. Add the tomatoes. Boil for half an hour. Add the dhal. Clean the vessel containing the dhal with about two ollocks of water. Pour it in and boil for a couple of minutes. Add the coriander paste and a little later the coriander leaves etc., to flavour. Crackle a teaspoon of mustard in a teaspoon of heated ghee & add. .Serve with rice.

Tomato Pachidi:—Tomatoes ripe 5 palams; gingelli oil—6 teaspoonsful; Green chillies—3 cut into pieces; Mustard—1 teaspoonful—salt to taste—Good thick Sweet curd 2 ollocks. (sweet to mean not the least bit sour.)

Broil the tomatoes, crackle the mustard and broil the chillies together, add this to the curd. Peel off the skin of the tomatoes and mash a bit. Add this to the curd, add salt before serving and serve.

The same pachidi can be prepared raw. Wash and slice the tomatoes. Take 3 big onions, peel and slice them. Add these two to the curds and cut green chillies. Season with mustard—add salt mix and serve.

Stuffed tomatoes.

Tomatoes	—	8 big ones.
Potato	—	¼ viss.
Cabbage	—	cut pieces a cupful.
Peas (Green)	—	⅛ cup.
Green Chillies	—	9 to 12.
Salt	—	to taste.
Bread crumbs	—	½ cup.
Ghee	—	9 teaspoonsful.
Oil Gingelly	—	half a cup.

Boil the potatoes—peel and mash well to smooth paste. In a little ghee roast the crumbs and remove. Pour the remaining ghee, add a teaspoon of mustard and allow it to crakle, then add the cut chillies, cabbage, peas, a pinch of safforon powder, salt and broil well. When well broiled add the potato and the crumbs. Sprinkle a little water so that all will be well mixed and cooked well. Remove, when cooked. This forms the filling.

Wash the tomatoes—cut off a rupee size from the top from each and coop and remove the pulp and seeds. Now fill the cavity so formed with the

filling prepared. Paste the cut piece with a little american flower paste. Heat the oil in the frying pan and broil the tomatoes one by one till the skin shrinks. Remove and serve.

Tomato Chutney

Take 4 big unripe tomatoes. Place the frying pan on fire and pour 4 teaspoonsful of oil heat and broil till the skin of the tomatoes crack. Remove.

Add 4 more spoons of oil, add 2 tablespoons of broken black gram, 6 to 8 chillies, asafoetida and a teaspoon of mustard and fry. Grind these to a rough paste with salt to taste and a pod of tamarind. Peel the skin off the tomatoes add and grind. Remove. Can be served with Dosai, prepared rices etc.

Jam :—Take half a viss of good ripe tomatoes wash and place in a basin. Pour hot boiling water over the tomatoes and keep for a few minutes. Remove and peel the skin—mash and drain off the seeds. Add to this juice ½ viss of sugar and keep on slow heat. Allow it to simmer and boil, till it condenses to a jelly mass. Remove, cool and bottle.

Serve with bread.

by 'B'

விகடம்

சென்ஸஸ் அதிகாரி :—உன் பெயரென்ன ?
எஜமான் :—எருமைக்கந்தன்.
செ. அதிகாரி :—உன்னுடைய சொத்து ?
எஜமான் :—10 எருமைகள.

* *

உபாத்தியாயர் :—டேய் 4, 3 எவ்வளவு ?
பையன் :—3333 சார்

* *

ஒருவர் :—சே, சே, இதென்ன காலம் !
மற்றொருவர் :—(மேலே பார்த்து) இது இலையுதிர் காலங்க.

* *

பையன் 1 :—டேய் ஓரலைப் பார்த்தியாடா ?

பையன் 2 :—டேய் உங்க வீட்டில் வரும்போது தான் பார்த்தேண்டா. அதுக்குளளே தொலைந்து விட்டதாடா ?

பையன் 1 :—அந்த ஓரலைக் கேட்கவில்லையடா. கிரிக்கெட் ஓரலைக் கேட்டேண்டா

பையன் 2 :—அவனா ? நல்லா விளையாடினாண்டா.

* *

காணாமறபோன சிறுவனின் தகப்பனார் :—(போலீஸ்காரனிடம்) எப்படியாவது என பையனைக் கண்டுபிடிச்சுத் தரணும.

போலீஸ்காரன் :—உம பையன் எப்படி இருப்பான் ?

தகபபனார் :—வேஷ்டி கட்டிக்கொண்டும் ஷர்ட், போட்டுக்கொண்டுமிருப்பான்.

* * *

By A. S. Vijaya, IV Form B.

CONNEMARA 14 AUG 1955 MADRAS

காய்கறிகள்

இப்பரந்த உலகில் மக்களின், தேகாரோக்கியத்திற்கென கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட உணவு வகைகளில் காய்கறி வகைகளும் ஒன்றாகும். நமது தேசத்தில் விளையும் காயகறிகளுக்குக் கணக்கேயில்லை. இயற்கையாக சிருஷ்டிக்கப்பட்ட இக் காய்கறிகள் மக்களது பெருமுயற்சியினபேரில் செயற்கை முறையிலும் ஒரளவு அதிகரிக்கப்படுகின்றன. இக்காய்கறிகளிலிருந்துதான் நம் தேக ஆரோக்கியத்திறகு இன்றியமையாத பல உணவுச் சத்துக்கள் கிடைக்கின்றன. மேலும் இக்காய்கறிகள் அளிக்கும் உணவுச் சத்துக்களின் மூலம் நம் தேகத்திற்குப் பல வியாதிகளும் வராமல் தடுக்கப்படுகின்றன.

இனி இக்காய்கறிகளிலிருந்து எந்தெந்த உணவுச் சத்துக்கள் கிடைக்கின்றன என்றும், அவற்றின் பயன் யாது என்பதையும் ஆராய்வோம்.

முக்கியமாக இக்காய்கறிகளிலிருந்து உலோக உப்புச் சத்துக்களும், உயிர்ச் சத்துக்களும், நார்ப்பொருளும் ("Roughage") கிடைக்கின்றன; காய்கறிகளில் பெரும்பாலும் தண்ணீர் அதிகமாகக் காணப்படுகிறது. காய்கறிகளைப் போலவே கீரைவகைகளிலிருந்தும் உலோக உப்புச்சத்துக்களும், உயிர்ச்சத்துக்களும், நார்ப்பொருளும் கிடைக்கின்றன. கீரைத்தண்டுகளையும காய்கறிகளைப் போல பயன்படுத்திக் கொள்ளலாம்.

அவரை போன்ற கொழுத்த விதைகளுள்ள காய்கறிகளில் புரதமும், கரிநீரகச் சத்தும் அதிகமாகக் காணபபடுகின்றது. மற்றும் கொத்தவரை, பெரிய அவரை, முருங்கைக்காய், பலாக்கொட்டை, பட்டாணிக்காய், பாவக்காய், சுண்டைக்காய் முதலியவை இத்தன்மையன. இவற்றில் கொழுப்புச்சத்து அதிகமாகக் கிடையாது. உலோக உப்புச் சத்துக்களுள் சுண்ணும்புச்சத்து அதிகமாக உள்ளவை - கீரைகள், கீரைத்தண்டுகள், சீமைக் கத்தரிக்காய், கொத்தவரை, கண்டங்கத்திரி, சுண்டைக்காய், முருங்கைக்காய் முதலியன. மஞ்சள நிறக்காய்களில் 'கேரோட்டின்' உள்ளது. சில காய்களில் உயிர்ச்சத்து 'C'யும், 'B'யும் உள்ளன.

இவற்றைத்தவிர உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி, வெங்காயம், பீட்ரூட் போன்ற பல கிழங்குகளை மக்கள் ஆகாரமாக உட்கொள்கின்றனர். இவற்றில் உருளைக்கிழங்கில் அதிகமாகக் கரிநீரகச்சத்து அடங்கி உள்ளது. வெங்காயம், கேரட் இவைகளில் கரிநீரகச்சத்து சிறிதளவு உள்ளது. இக்கிழங்கு வகைகளில் சிலவற்றில் குறைந்த அளவில் புரதம் கிடைக்கின்றது. உலோக உபபுச் சத்துக்களும் இக்கிழங்குகளில் கிடைக்கின்றன. காயகறி கிழங்குவகைகளிலேயே வெங்காயமும் பூண்டும மிகவும் மதிப்புப் பெற்றவை. இதற்குக் காரணம் என்னவெனில் அவற்றில் உள்ள ஆகாரச் சத்தும், வியாதியை எதிர்க்கும் தன்மையும் ஆகும்.

இனி இவ்வகை உணவுப் பொருட்களிலிருந்து கிடைக்கும் உணவுச் சத்துக்கள் எவ்வாறு நம் தேகத்திற்குப் பயன்படக்கூடும் என்பதையும், சமைத்தலினல் இவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதையும் பார்பபோம.

காய்கறிகளிலும், கீரைவகைகளிலும் கிடைக்கும் உலோக உப்புச்சத்துக்கள் நம் தேகத்தில் எலும்புகளின ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியம். இவ் உணவுச் சத்துககள் நம உணவில் ஒரு குறிபபிட்ட அளவு சேர்க்கப்படாவிட்டால் எலும்பு சம்பந்தமான நோய ஏற்பட ஏதுவாகும. இவற்றிலிருந்து கிடைக்கும உயிர்ச் சத்துக்கள முக்கியமாக நம தேக அவயவங்களின ஆரோக்கியத்திறகு உதவுவதோடல்லாமல், நமக்குப் பல வியாதிகள ஏற்படுவதைத் தடுக்கவும் உபயோகமாகிறது.

உதாரணமாக வைட்டமின் 'A' கண் சம்பந்தமான நோய்களைத் தடுக்கவும், வைட்டமின் 'B,' 'பெரி-பெரி' ('Beri-Beri') என்ற நோயைத் தடுக்கவும், வைட்டமின் 'C' "ஸ்கர்வி' என்னும் நோயைத் தடுக்கவும் பயன்படுகின்றது.

இம்மாதிரி நம் தேகத்திற்குப் பலவிதங்களில் உபயோகமாகும். இவ்வுணவுச் சத்துக்கள் சமைத்தலின் மூலம் கெடாமல் பாதுகாக்கவேண்டியது நமது முக்கிய கடமையாகும். காய்கறிகளிலிருந்து கிடைக்கும் உயிர்ச்சத்து 'C' உஷ்ணத்தினால் வெகுவாக பாதிக்கப்படக்கூடியது. மேலும் இவ்வுயிர்ச்சத்து ஆவியாகுதல் என்ற முறையினால் அதிகம் பாதிக்கப்படக்கூடியது.

மஞ்சள் நிறமும், மஞ்சள் நிறத்துடன் சிகப்பு நிறம் கலந்ததும், பச்சை நிறமும் வாய்ந்த காயகறிகளில் 'வைட்டமின் A' அதிகமாகக் கிடைக்கும் என்பதை உணர்தல் வேண்டும். இவ்வுயிர்ச்சத்து 'A' உஷ்ணத்தினாலும், வெளிச்சத்தினாலும பாதிக்கப்படுகிறது. இதைத தவிர்க்கக் குறைந்த அளவு உஷ்ணம் அளிக்கக் கூடிய முறையில் இவ் உணவுப் பொருட்களை சமைத்தல் வேண்டும். முக்கியமாக இவ் உயிர்ச்சத்துக்களின் முழுப்பயனையும் நாம் பெறவேண்டுமானால் அதிகமான தண்ணீரில் சமைத்தல் கூடாது. அவ்வாறு சமைத்தல் அவசியமானால் அந்தத் தண்ணீரை வீணாக்காமல் மற்ற உணவோடு சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இவ்வுயிர்ச் சத்துக்களுள் சில தண்ணீரில் கரையக்கூடியன. 'வைட்டமின்' 'B' இனத்தைச் சார்ந்த உணவுப் பொருட்களைச் சமைக்கும்பொழுது சோடா (Baking Soda) முதலிய காரப்பொருட்களைச் சேர்த்தல் கூடாது.

இம்மாதிரிப் பலவிதங்களிலும் நம் தேகத்திற்கு இன்றியமையாத உணவுச் சத்துக்களை (முக்கியமாக உயிர்ச்சத்துக்களை) அளிக்கவல்ல இக்காய்கறி, கிழங்கு வகைகளைப் பயிர் செயய இந்தியாவில் ஒவ்வொரு வீட்டுக்கருகிலும ஒரு சிறிய தோட்டமாவது இருப்பது மிகவும் அவசியம். இத்தோட்டங்களில் ஒரு பகுதியில் கீரை வகைகளை உற்பத்தி செயதல் வேண்டும.

தண்ணீர் வசதி இல்லை என்றும், பிராணிகளின் தொந்தரவினாலும் தோட்டம் வைக்க இயலாது எனறு மக்கள் எண்ணம கொண்டு 'தோட்டம அமைத்தல்' என்னும் எண்ணத்தைக் கைவிடலாகாது. இயற்கையாக உலகத்தில் அமைந்துள்ள பலவசதிகளையும், தக்கமுறையில் பயன்படுத்தி ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சிறிய தோட்டம் அமைத்தல் என்பது பகுத்தறிவு வாய்ந்த நம்மால் இயலாதது என்றால் வேறு யாரால்தான் முடியும்? இவ்வுண்மையை அனைவரும உணர்ந்து, காய்கறிகள் நமக்கு அளித்துவரும் சகல நன்மைகளையும அறிந்து அவற்றை ஒவ்வொரு வீட்டினரும பயிர் செய்து, அவறறால் உண்டாகும் பயனை, சமைத்தல் முறைகளின் மூலம வீணாக்காமல் பாதுகாத்து அனுபவித்து வந்தால் நாம் அனைவரும் தேகாரோக்கியமாகவும் இன்பமாகவும் வாழ்க்கை நடத்துவோம் என்பது திண்ணம்.

T. Jayalakshmi and J. Mangalam,

Form VI A. (Home-Science Subsidiary.

பெண் கல்வியும் குடும்ப நிர்வாகக் கலையும்

"மங்கையராகப பிறபபதற்கே—நல்ல மாதவம் செய்திடவேண்டும்" என்பது ஒரு பெரியாரின முதுமொழி. இதற்கு ஏறப உலகத்தில் பெண்மையின் சிறப்பும குணமும, கற்பும் சிறப்பாகப பல நூல்களாலும, பல பெரியோர்களாலும போற்றப் படுகிறது.

கிடைத்தற்கரிய இத்தகைய பிறவியைப் பெற்ற பெண் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் சிறப்புக்கு அழிவு ஏற்படாதவாறு நேர்மையான முறையில் வாழ்க்கை நடத்தவேண்டும். சமூகத்தில் பெண்களுக்குரிய உரிமைகளை இழக்காமல், அவ்வுரிமைகள் மேன்மேலும் சிறப்புற விளங்க முயற்சி செய்தல் வேண்டும்.

முற்காலத்தில் பெண்கள் எல்லோரும் படிதாண்டாத பத்தினிகளாக இருக்கவேண்டும் என்றும், அவர்கள் குடும்பப் பொறுப்பைத் தவிர மற்ற வெளி அலுவல்களை செய்யத் தகுதியற்றவர்களென்றும், அவ்வாறு செய்வது பெண் குலத்திற்கே இழிவு என்றும் பல மூடக்கொள்கைகளைக் கொண்டிருந்தனர். ஆனால் நாகரிகமிக்க இக்காலத்தில், கல்விக்கு தெய்வம் கலைமகளாக இருக்க, பெண்கள் கல்வி கற்காமல் இருப்பது மதியீனம் என்பதை அறிந்து தற்காலத்துப் பெற்றோர்கள் தங்கள் பெண்களைக் கல்வி கற்குமாறு பள்ளிக்கு அனுப்ப முன் வந்துள்ளார்கள். ஆதலால் பெண்கள் தங்கள் அடிமை வாழ்விலிருந்து விடுபட்டு, சுதந்திரமாகப் பல இடங்களுக்குச் சென்று வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்வியையும், மற்றும் பல கைத்தொழில்களையும் கற்றுத் தங்கள் வாழ்க்கை நலனுக்குப் பயன் படுத்துகின்றனர். மேலும் தற்காலத்தில் குலமாதர்கள் தங்கள் கல்வியறிவின் நுண்ணிய ஆற்றலால் சிறந்த பதவிகளை ஏற்று பெண்களின் நாகரீகச் சிகரமாக விளங்குகிறார்கள்.

பெண்கள் இம்முறையில் கல்விச்சிறப்பின் முழுப்பயனையும் பெறுவதோடல்லாமல், தங்களுக்கு இயற்கையாக உள்ள குடும்ப நிர்வாகத்தையும், தங்கள் கல்வியறிவின் உதவியால் நேர்மையான முறையில் சிறப்புடன் நடத்துவதற்கான தகுதியைப் பெறுகின்றனர். இத்தகைய வாழ்க்கை நடத்துவதற்கு குடும்ப நிர்வாகக் கலையறிவு மிகவும் பயன்படுகிறது. இக்கலையறிவின் மூலமாக ஒரு பெண் தன் குடும்பத்தை நேர்மையான முறையில் நடத்தப் பயிற்சி பெறுகின்றாள். குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு மூலாதாரமாக உள்ள குடும்பத்தலைவியே குடும்பத்தை எல்லா விதத்திலும் சிறக்க நடத்த முயலவேண்டும். குடும்பத்தலைவியானவள் முதலில் வருவாயைக் கவனித்து அதற்குத் தகுந்தாற்போல செலவு செய்தல் வேண்டும். குடும்பத்திற்கு வேண்டிய வருவாயை சம்பாதிப்பவன் கணவனானாலும், மற்றவர் யாவராயிருந்தாலும், வரவுக்கேற்றபடி கவனித்துச் செலவு செய்யும் பொக்கிஷ மந்திரி பெண்ணே ஆவாள்.

தங்கள் வருவாயை உணவு, உடை, இருப்பிடம் கல்வி ஆகியவற்றிற்கென பிரித்துக்கொண்டு அதன்மூலம் ஒவ்வொன்றையும் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, வருவாயில் ஒரு சிறு பகுதியைக் கூடிய வரையில் மீதியாக்கி பிற்கால நன்மையின் பொருட்டுச் சேமித்து வைக்க முயலவேண்டும்.

பெண்கள் ஒவ்வொருவரும் தாங்கள் வசிக்கும் வீட்டைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துக்கொள்ள வேண்டும். வீடானது சிறிதாக இருந்தாலும் அதிலுள்ள அறைகளைத் தங்கள் வசதிக்கேற்றபடி சமையலறை, சாமான் அறை, படுக்கும் அறை, வரவேற்கும் அறை போன்றவைகளாகப் பிரித்துக்கொண்டு ஆங்காங்குள்ள பொருள்களை ஒழுங்காக வைக்கவேண்டும். ஒவ்வொரு அறையும் சுத்தமாகவும், அங்கு வைக்கப்படும் பொருள்கள் பொருத்தமாகவும் இருக்க வேண்டும். வீட்டைக் கூடிய வரையில் அழகு பெறச்செய்வது கல்விகற்ற பெண்களுக்கழகாகும். வீட்டிலுள்ள ஒவ்வொரு பகுதியையும் அங்கு வைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு ஒழுங்காக அலங்கரிக்கலாம். எளிய பொருளாக இருந்தாலும், அவைகளை ஏற்ற இடத்தில் வைத்து அழகுபடுத்தினால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். சமையல் அறையைச் சுத்தமாகவும், பார்ப்பதற்கு அழகாகவும் ஒழுங்குபடுத்துவது முதன்மையாகக் கருதப்படும். இங்குதான் பெண்கள் தாம் கற்ற குடும்ப நிர்வாகக் கலையை முற்றும் பரிமளிக்கச் செய்ய வேண்டும். தகுந்த

பொருள்களைக் கொண்டு தகுந்த இடத்தில் வைப்பதே இக்கலைக்கு அழகாகும்.

சமையல் அறையில் பாத்திரங்கள், சாமான்கள் முதலியவை வைப்பதற்கான "அலமாரி"கள், பலகைகள் முதலியவைகளை அமைக்கலாம். இவைகளை அதிக உயரமாகவும், மிகத் தாழ்வாகவும் அமைக்காமல் சரியான இடத்தில் அமைத்து, அவைகளில் வேண்டிய பொருள்களை ஒழுங்காக அடுக்கிவைத்துக் கொள்ளலாம். பலகை போன்றவைகளில் உண் கலங்கள் முதலியவற்றை சுத்தமாகத் தேய்த்து பளபளப்பாகச்செய்து வரிசையாகக் கவிழ்க்கலாம். பரண்கள் முதலியன அமைத்து அங்கு விறகு, கரி முதலியவைகளை வைத்துக்கொள்ளலாம். தயாரித்த உணவுப் பொருள்களையும் ஒழுங்காக மூடி வைக்கவேண்டும். பலநாள் வைக்கக்கூடிய உணவுப்பொருள்களை, கவனமாகக் கெட்டுவிடாமல் தகுந்த பாதுகாப்புடன் வைக்கவேண்டும்.

வீட்டிலுள்ளவர்களின் உடைகளையும் சுத்தமாகச் சலவை செய்து, கூடுமானால் "இஸ்திரி" செய்யும் கருவி உபயோகித்து மடித்து வைக்கவேண்டும். உடைகள் கிழிந்திருந்தால் அவற்றை உடனுக்குடனே தைத்து அதன் பிறகே சலவை செய்யவேண்டும். வீட்டிலுள்ள உயர்ந்த ஆடைகளையும், புதிய ஆடைகளையும் சில பூச்சிகளின் மூலம் கெடாதவாறு தகுந்த பாதுகாப்புடன் வைத்துக் காப்பாற்றவேண்டும்.

வீட்டில் நோயாளிகள் இருந்தால் அவர்களை மிக்க கவனத்துடன் பாதுகாக்கவேண்டும். நோயாளிகளுக்குத் தகுந்த வேளைகளில் தகுந்த ஆகாரங்களை அவர்கள் விரும்பும் முறையில் தயாரித்துக் கொடுக்க வேண்டும். அவர்களின் உடைகளைத் தனித்தனியே சலவை செய்ய வேண்டும். தொற்று நோய் உள்ளவர்களாக இருந்தால் அவர்களுக்குத் தகுந்த சிகிச்சைகளைச் செய்வதற்கு அவர்களைக் குறிப்பிட்ட வைத்திய சாலைக்கு அனுப்பிவிடுதல் நலம். அவர்களை வீட்டில் வைத்துக் கொள்ளக் கூடுமானால் தனி அறையில் இருக்கச் செய்ய வேண்டும். அவர்களுக்கு மகிழ்ச்சி யுண்டாகும் வகையில் அந்த அறையில் பல அழகிய இயற்கை காட்சிகள் உள்ள படங்களை சுவரில் தொங்க விடலாம். அவர்களுக்கு எதிரில் ஒரு சிறிய வட்டமேஜையில் அழகிய வேலைப்பாடுடன் கூடிய விரிப்பை விரித்து அதன் மீது அழகிய பூக்களைக் கொண்ட பூக்கிண்ணத்தை வைக்கலாம். இவ்வாறு அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் குடும்பத்தலைவி நடந்து கொள்ள வேண்டும்.

குடும்ப நிர்வாகக்கலையின் வாயிலாகப் பெண்கள், தாங்கள் கற்ற தையல் வேலைகளை பயன் படுத்தி அதன் மூலம் வீட்டை அழகு படுத்தலாம். வரவேற்கும் அறையில் மேஜை முதலியவை மீது தையல் வேலைப்பாடுடன் கூடிய விரிப்பை விரிக்கலாம். தலையணை உறை முதலியவற்றிலும் அழகிய பூவேலைகளைச் செய்யலாம். ஓய்வு நேரங்களில் தங்கள் குழந்தைகளுக்கும், தாங்கள் கற்ற தையல் வேலைகளைக் கற்றுக் கொடுக்கலாம். பெண்கள் குடும்பத்தின் வருவாயை அதிகரிக்கவும் இவ் வேலைகளை பயன் படுத்திக் கொள்ளலாம்.

பெண்கள் குடும்பத்திலுள்ளவர்களையும், குழந்தைகளையும் தாங்கள் கற்ற கலையறிவைக் கொண்டு ஆரோக்கிய நிலையில் வளர்த்து, அவர்களுக்கு நல்ல பழக்கம் ஏற்படுமாறு சிறு வயதிலேயே பழக்க வேண்டும். குழந்தைகள் எல்லோருக்கும் கல்வியறிவு ஏற்படச் செய்யவேண்டும். வசிக்கும் வீட்டை சுகாதார முறையில் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். உணவு தயாரிக்கையில், உணவு பண்டங்களின் சத்துக்கள் குறையாமலும், அவை கெட்டுவிடாமலும், கவனமாகவும், சிக்கனமாகவும் தயாரிக்க வேண்டும். வீட்டிற்கு வரும் உறவினரையும் விருந்தினரையும் நன்கு உபசரித்து அனுப்புதல் படித்த பெண்களுக்குரிய கடமையாகும்.

கல்வி கற்ற பெண் என்ற முறையில் குடும்பத்தைக் கவனிக்காமல் ஆடம்பரமாக வெளியிடங்களுக்குச் சென்று பணத்தை வீணான முறையில் செலவு செய்தல் கூடாது. செல்வந்தர் வீட்டுப் பெண்ணாகவும், குடும்பத்தொல்லை அதிகம் இல்லாமலும் இருக்கும் பெண்கள் சமூகத்திற்குப பல விதத்திலும் தொண்டாற்றுபவராவார்கள்.

இத்தகைய குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத குடும்பக்கல்வியைக் கற்றுத் தேர்ந்தால் தான், அவர்கள் அக்கலையறிவின் மூலமாக நேர்மையான குடும்ப வாழக்கையை நடத்தத தகுதி உடையவர்களாக முடியும். இவ்வாறு கல்வி கற்ற பெண்கள் அனைவரும் தங்கள் கல்வியறிவினால் சிறந்த முறையில் குடும்பத்தை நிர்வகித்து, மற்ற பொது சேவைகளிலும் பங்கெடுத்துக் கொண்டு பலருக்கும் நன்மை புரிந்து சிறக்க வாழ்ந்தால் பெண் கல்வியின் முழுப்பயனையும் அடைந்தவர்களாகக்கருதப்படுவார்கள். இதற்குப் பெரிதும் துணை புரிவது குடும்ப நிர்வாகக்கலையே யாகும்.

வாழ்க பெண்மை அரசு!
ஓங்குக குடும்பநிர்வாகக்கலை!

V. Rangarajam.
Form V C.
(Home Science Subsidiary)

வாழ்வு

எனது தலைப்பைக் கண்டு படிப்பவர்கள் ஆச்சரியப்படலாம். என்ன எழுத முடியும் என யோசிக்கலாம். கடைசியில் தலைப்பிற்கும் உள்ளிருப்பதற்கும் சம்பந்தம் உண்டா, இதென்ன இது என நினைக்கவும் செய்யலாம். ஆனால் ஒன்று எல்லாம் அவரவரின் விருபபத்தைப் பொருத்தது.

எனக்கு வெகு நாட்களாக எழுத வேண்டுமென ஆசை உண்டு. ஆனால் எனக்குத் தோன்றும் விஷயம காலத்தில் இரசிக்குமா எனத் திகைத்ததுண்டு. இப் பிரச்னையைத் தீர்பபதறகு முடிவானதும் தெளிவானதுமான அபிப்பிராயம இல்லாததால் தடை பெற்று நின்றது. அன்றாட வாழ்க்கையை நினைக்கும் பொழுதெல்லாம் ஏனோ என் செவிகளில் மகாகவி ஷேக்ஸ்பியரின் சொற்களான "உலகம் ஒரு நாடகமேடை நாம் அதில் நடிக்கும் நடிகர்கள்" என்பது இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கும். நாம் சினிமாவிற்குச் சென்று காட்சிகளைக் காண்கிறோம. அதை நாம் ஏன் இரசிக்கிறோமென்னில் அவைகள் நாமும நடிகர்கள் தாம் என்பதை அச்சமயம் மறக்கச் செய்கிறது. ஒவ்வொரு நாள் வாழ்வும சில வீடுகளில் நாடகமே. சில சமயங்களில் நாம ஒரே வீட்டின் அங்கத்தினராக இருந்தால்கூட நாகரீகத்தைக் கருதியும், இன்னம் பல்வேறு காரணங்களாலும் சில வீடுகளில்தான் காணப்படுகின்றனவோ அல்லது அநேகம் வீடுகளில் தற்கால நாகரீகத்தை ஒட்டி நடக்கின்றனவோ அறியோம்.

பெரியோர், "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என பாடக் கேட்டிருக்கிறேன். நானும் ஒரு காலத்தில் இது என்னதற்காகப் பாடப்பட்டது? அமமாதிரிகூட மனிதர்கள் இருப்பார்களா? வாழ்க்கையில் தினசரி ஒருவரோடொருவர் ஒன்றி ஒரு குடும்பத்தில் ஈடுபட்டிருக்கும்போது இது எவ்வாறு நடக்க முடியும்?—முடியவே முடியாது. நடக்கவே நடக்காது என்றும தீர்மானமான அபிபபிராயத்தை உடையவளாக இருந்தேன் ஆனால் இன்றோ நான் ஒரு காலத்தில் அவ்வளவு திட கொள்கையைக் கொண்டவளா என நினைக்கும பொழுது எனக்கே ஆச்சர்யமாக இருக்கின்றது. ஆனால் ஒன்று மாத்திரம் திண்ணம்— நடிக்கிறேன், நடிப்பேன் எனச் சொல்லலாம்,

ஆனால் நடித்தேன் எனச் சொல்லமாட்டேன், ஏனெனில் செயல் நடிக்கக் கற்றுக் கொண்டாய்விட்டது; நன்கு கற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் இக்கட்டுகள் ஏற்படுகின்றன. வாழ்க்கையில் திறம்பட நடிக்கும் திறன் இருப்பின் வெற்றி சுலபமாகப் பெறலாம் என்பதை இப்பொழுது அறிந்தேன். அறிந்தும் மனதில் அதைப் பற்றின விவரங்கள் சரிவர தெளிவாகப் பதியாததால் மாறறம ஏற் படுகிறது. சொற்களும் செய்கைகளும் சரிவர அமையவில்லை ஏன்? வாழ்வு என்பது ஒரு பெரும புதிர். அதன் முடிவை அறியாமல் நாம் திக்குமுக்காடு கிறோம். முடிவு சரிவர அமைவதற்கு நாம் படிக்கும் இதிகாசங்கள் என்ன கூறு கின்றன? வாழ்வைச் சரிவர அமைப்பதற்குத் தூய்மை வேண்டும். எண்ணங் களில், சொல்களில், செயல்களில் எல்லாவற்றிலும் தூயமை காணப்படவேண்டும். வாழ்க்கையில் இதற்கு இடம் உண்டா என்று சம்சயம் ஏற்படுகிறது. எண்ணங் களுக்கும் தீர்மானங்களுக்கும் செய்கைகளுக்கும் சில சமயங்களில் சம்பந்தமோ ஒட்டுதலோ இருப்பதுபோன்று காணப்படுவதில்லை. இவைகள் கூட இடத்திற்கு இடம் மாறுவதைக் காண்கிறோம். வெளியில் தூய்மையாகவும் சந்தோஷமாகவும் காணபபடும மனிதன் வீட்டில் அமைதி இழந்தவனாகவும் வெறுக்கத்தக்கவ னாகவும் காணபபடுகின்றான். வாழக்கை பிளவுபட்டு இருதரப்பு உடையதாகத் தோன்றுகிறது. எங்கு நடக்கிறான், எங்கு நிஜ ஸ்வரூபத்தில் காணபபடுகிறான் எனபதைத் தீர்மானமாகச் சொல்ல அதிக அவகாசம் வேண்டியிருக்கிறது. "வாழ்க்கை இரகசியம்" இதை நினைத்தால் வாழ்க்கை வெறுப்பாக மாறுகிறது.

வெளித் தோற்றத்திற்கும் உள் தோற்றத்திற்கும் உள்ள வித்தியாசமே நாம் நடிகர்கள் என நம்மை அறிவுறுத்துகிறது. வெளி அழகைக்கண்டு மயங்கிக் குண்டோமானால் அது நமக்குப பிறகு பேரதிர்ச்சியைத் தருகிறது.

சிந்தையை அடக்கிச் சும்மா இருக்க அறியாத அறியாமையினால்தான் நாம் நடிகர்களாக மாறி நம் வாழ்வை பாழ்படுத்தி, சந்தோஷமின்மையையும கஷ் டத்தையும அடைகிறோம். இதுவே புறவாழ்வு — அகவாழ்வு கடவுள் படைப்பிலே காணப்படுகின்ற உயிர்களுக்குள்ளே ஒவ்வொரு இந்திரிய இச்சைக்கும் இலக்கண பிராணிகள் படும்பாட்டைக் காணும்பொழுது பஞ்சேந்திரிய இச்சைகளை ஒருங்கே அமைக்கப் பெற்ற மனிதவாழ்வு இவ்வாறுதான் இருக்குமெனத் தெரி கிறது. காட்சி இன்பத்திலே அதிகமாக ஈடுபடக்கூடியது என்று சொல்லும்படி யான விட்டிற்பூச்சியின் பிரகாசமான விளக்கை அழகினாலே ஈர்க்கப்பட்டு அதன் அருகில் சென்று சுற்றி வட்டமிட்டு மடிகிறது இறுதியில்.

அப்படியே நறுமணத்திலே தன் மனத்தைச் செலுத்தக் கூடிய வண்டா னது மணமுள்ள மலரையே நாடி. அதில் ஈடுபட்டு மயங்கி இருக்கும காலையில் சூரிய அஸ்தமனம் ஆவதையும் கவனியாமல் மலர்கள் குவிய அதற்குள்ளே சிக்கி விடுதலை அடைய முடியாமல் சிறைபடுவதைக் காண்கிறோம்.

மெய்யின்பத்தில் களிக்கக்கூடிய யானையானது தன் இனத்தைத் தேடிச் செல்லும் காலத்தில் தனக்காக வெட்டப்பட்ட படும்குழியைக் கவனியாது விரைந்து சென்று அப்பள்ளத்தில் விழுந்து உழல்வதைக் காண்கிறோம்.

மற்றும் சுவையின்பத்திலே ஈடுபடும் மீனானது வாயைத் திறந்துகொண்டே நீரில் செல்லும்பொழுது தூண்டிலில் அகப்பட்டு உயிர் இழக்கின்றது.

ஓசையின்பத்திற்கு இலக்காகும் அஸனப் புள்ளானது பறையொலி கேட்டு உயிர்விடுவதைக் காண்கின்றோம. அப்படியிருக்கக் கடவுள நமக்கு ஐம்புல இச்சையையும ஒருங்கே அமைத்துத் தந்தாராயினும் நல்லது கெட்டதுஎன்று அறி யும பகுத்தறிவைத் தந்து அதறகேற்றவாறு ஒழுகுமாறு ஆறுவது அறிவாகிய பகுத்தறிவையும் அளித்திருக்கின்றானன்றோ? ஆகையால் கிடைதற்கரியதான மானிடப பிறவியை அடைந்த நாம நம்மிடததில் எவ்வளவு கெட்ட குணஙகள் இருந்த போதிலும கொல்லாமை, பொயயாமை ஆகிய இந்த இரு கொள்கைகளைக் குறிக்கோளாகக் கொள்வோமானால் எல்லா தீமைகளையும் ஒழித்து, நல்லவர்களாக வாழலாம என்பது திண்ணம.

முதலியாரின் பிரயாணம்

அன்றுதான் விழுப்புரத்திலிருந்து கடிதம் வந்திருந்தது. மறுநாள் காலையில் குழந்தைகளுக்குக் காதுகுத்தப போவதாகவும், அதற்கு அவசியம் வரவேண்டுமென்றும் பார்வதியின் அண்ணன் எழுதியிருந்தார். சென்னையிலிருந்த பார்வதியும் அவள் கணவன் இரங்கசாமி முதலியாரும் ரயில் நெருக்கடியான இந்தக் காலத்தில் போவதா வேண்டாமா என்று முதலில் சிறிது தயங்கினார்கள். பின்னர் போய் இரண்டு நாள் தங்கியிருந்தாலும, இந்தப் பஞ்ச காலத்தில் கொஞ்சம் அரிசியாவது மிச்சப்படுத்தலாம், இரண்டு மூன்று வாரங்களாவது எப்பொழுதும் போல் சனிக்கிழமை பட்டினி கிடக்காமல் இரண்டு வேளையும் சாப்பிடலாமென்று நினைத்து உடனே பகல் வண்டியில் விழுப்புரத்திற்குப் புறப்பட்டார்கள்.

அன்று கடுமையான வெயில். ரயிலிலோ ஒரே கூட்டம். வண்டி தாம்பரத்தைத தாண்டுவதறகுள் பார்வதிக்குத் தண்ணீர்த் தாகம் நாக்கை வறட்டியது. வண்டலூரை வண்டி அடைந்தது. இரயில் நிலையத்தில் உள்ளே தண்ணீர் பிடிக்கலாமென்று ரங்கசாமி முதலியார் வெள்ளிக் கூஜாவோடு இறங்கினார். பாதிக் கூஜாவில் தண்ணீர் நிறைந்திருக்கும். அதற்குள் வண்டி கிளமபிவிட்டது. தொந்தியை தூக்கிக்கொண்டு அவர் ஓடி வருவதற்குள் வண்டி வேகமாக ஓட ஆரம்பித்து விட்டது. "கார்டு" அவரை ஏறவிடாமல் தடுத்துவிட்டுத் தான் மட்டும் ஏறிப் போயவிட்டார். பாவம்! முதலியார் தவியாமல் தவித்தார். தன் மனைவி தனியே என்ன செய்வாளோ என்று விழித்தார், அப்பொழுது ரயில் நிலையத்துக்கு வெளியே ஒரு 'பஸ்' ஒன்று வந்து நின்றது. அந்த 'பஸ்' செங்கல்பட்டுக்குப் போய்க்கொண்டிருந்தது. ரயில் பாதை பக்கத்திலே 'பஸ்' ஓடும் சாலையும் இருந்ததால் அந்த 'பஸ்ஸில்' ஏறினால் அடுத்த ரயில் நிலையமாகிய கூடுவாஞ்சேரி போய் அடைந்து விடலாம், அங்குத் தன் மனைவி இறங்கி உட்கார்ந்து இருப்பாள் என்று நம்பி, உடனே 'பஸ்ஸில்' ஏறிவிட்டார்.

நிற்க, ரயிலில் சென்ற பார்வதி 'குய்யோ முறையோ' என்று கத்த ஆரம்பித்து விட்டாள். வண்டியில் இருந்தவர்கள் ஒருவாறு அவளைச் சமாதானம் செய்து அடுத்த நிலையத்தில் போய் இறங்கினால் அடுத்த வண்டியில் முதலியார் வந்து விடுவார் என்று சொன்ன பிறகுதான் ஒருவாறு அடங்கினாள். கூடுவாஞ்சேரியும் வந்தது. அவளும இறங்கினாள். நல்லவேளையாக சென்னைக்குப் போகும வண்டி ஒன்று வர, அதில் வண்டலூரை அடைந்து தன் கணவனைக் காணலாமென்று நினைத்து அமமாள அதில் ஏறிவிட்டாள். ஐயா கூடுவாஞ்சேரி வரவும, அம்மா வண்டலூர் போகவும சரியாக இருந்தது. கூடுவாஞ்சேரியை அடைந்த. முதலியார் ரயில் நிலையத்தில் போய் விசாரித்தார். அங்கிருந்த ஒரு போர்ட்டர் அவர் மனையின் அடையாளத்தைச் சொல்லி அந்த அமமையார் வண்டலூருககுப் போன விவரத்தைச் சொன்னான். முதலியாருக்குப் பைத்தியம பிடித்தது போலாகி விட்டது. சாயந்திரம் வரை வேறு வண்டி ஒன்றும கிடையாது. சரி, ரயில்வே பாதை வழியாக வண்டலூருக்கு நடந்து விடுவது என்று தீர்மானித்துப் புறப்பட்டார். பாதிவழி போயிருபபார். அங்கே எதிரே நாலைந்து "போலீஸ்" காரர்கள வந்து கொண்டிருந்தார்கள். ரயில்வே பாதையில் வந்தால் வைவார்களோ என்று பயந்து ஓட ஆரம்பித்தார். கையில் வெள்ளிக் கூஜாவைப் பார்த்த அவர்கள் எஙகேயோ திருடிக்கொண்டு ஓடுகிறார் என்று அவரை விரட்ட ஆரம்பித்தார்கள். இவர் ஓட.........அவர்கள விரட்ட.........ஒருவாறு வண்டலூரை அடைந்து விட்டார். அவர்களும அவரைப் பிடித்து விட்டார்கள. அவர் என்ன சொல்லியும் நமபாமல் அவரைச் செங்கல்பட்டிற்கு அழைத்துப் போவதென்று தீர்மானித்து விட்டார்கள்.

சென்னை இரயிலில் ஏறிய பார்வதி வண்டலூர் வந்து இறங்க, அவர் அங்கு இல்லாமையால் வெளியே வந்து ஒரு 'பஸ்ஸில்' ஏறிப் போய் விடுவதென்று

செங்கல்பட்டு நிலையத்தை வந்தடைந்தாள். இவள் 'பஸ்ஸில்' ஏறிப் போவதற்கும், முதலியாரும் போலீஸ்காரர்களும் வண்டலூரை அடைவதற்கும் சரியாய் இருந்தது. அடுத்த ரயிலில் அவரை அழைத்துக்கொண்டு போய்ச் செங்கல்பட்டு ரயில்வே போலீஸாரிடம் ஒப்புவித்து விட்டனர். அந்த ரயில்வே போலீஸில் 'க்யூ' வரிசை நின்று கொண்டிருந்தது. திருட்டுத்தனமாக அரிசி கொண்டு வந்த அநேகரைக் கையும் களவுமாகப் பிடித்து அவர்களை 'க்யூ' வரிசையில் நிற்க வைத்து ஒவ்வொருவருக்கும் அபராதம் விதித்து வந்தார்கள். அந்த 'க்யூவில்' பார்வதியின் அண்ணனும் நின்று கொண்டிருந்தார். குழந்தைகளுக்குக் காது குத்தல் விழாவிற்கு அரிசி போதாமையால் கிராமத்திலிருந்து தெரியாமல் கொண்டு வரலாமென்று கொண்டு வந்த அவர் அகப்பட்டுக் கொண்டார். முதலியார் அவரைப் பார்த்ததும் விஷயம் அறிந்து கொண்டார். முதலியாருக்கு அவர் மைத்துனரும், மைத்துனருக்கு முதலியாரும், 'ஜாமீன்' கொடுக்கப் போலீஸார் ஒப்புக்கொள்ளவில்லை. நல்ல வேளையாக, பார்வதி 'பஸ்ஸை' விட்டிறங்கி அந்தப் பக்கம் வந்தாள். விஷயம் எல்லோருக்கும் அப்பொழுதுதான் விளக்கப்பட்டது.

முதலியாரும் பார்வதியும் அன்று பட்டபாட்டைக் கேட்டு போலீஸ்காரர்கள் கூட "சிரி சிரி" என்று சிரித்தார்கள். ஒரு வழியாக அவர்கள் நிரபராதிகள் என்று விடப்பட்டதும் நேரே 'ரயிலில்' ஏறி விழுப்புரத்தை வந்தடைந்தார்கள்.

இப்பொழுதெல்லாம் என்ன தாகமெடுத்தாலும், முதலியார் ரயிலை விட்டு இறங்குகிறதில்லை. அவர் பட்டபாடு நீங்கள் பட்டிருந்தால் அல்லவா தெரியும் அந்த வருத்தம்!

கோ. ஆண்டாள்,
5ம் வடிவம். பி. பிரிவு.

தியாகம்.

சூரியன் மேற்குக்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கின்றான். சல சலவெனும் சப்தத்துடனே ஓர் சிற்றாறு ஓடிக் கொண்டிருக்கிறது. கரைகளில் உள்ள மரங்களில் பறவை இனங்கள் உல்லாசமாகவும் பிறர் மனம் மகிழுமாறு பாடிக்கொண்டிருக்கின்றன. கரையின் புறத்தே உள்ள சோலை ஒன்றினில் மயில்கள் தங்கள் தோகைகளை விரித்து ஆடிக்கொண்டிருக்கின்றன. விலங்குகள் தங்கள் இல்லங்களுக்கு மீண்டு கொண்டுள்ள இவ்வந்தி நேரத்தில் எழில் வாய்ந்த சோலையின் கண் ஓர் ஆசிரமம் தென்படுகிறது. அது யாருடையது? அது ஒரு உலகத் துறவியின் இல்லம். அதோ! அவரும் எங்கேயோ சென்று விட்டுத் தன் கமண்டலத்தை கையிலே கொண்டவராய் தன் ஆசிரமத்திற்குச் செல்கின்றார்.

ஆம்! அவர் ஓர் அபாக்கியசாலிதான். அவர் வாழ்க்கைச் சித்திரம் கல் மனத்தையும் உருக்கும் சக்தி வாய்ந்தது.

டக், டக், டக், கென்று உளியைச் சுத்தியால் தட்டும் ஓசை கேட்கின்றதே அது எங்கிருந்து வருகின்றது? கவனித்துப் பாருங்கள். ஆம் அம்மலைக் குகையிலிருந்துதான். அங்கு மினுக் மினுக்கென்று ஓர் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்தே அவ்வொலி வெளிப்படுகிறது. அவ்வமயம் ஒருவர் வந்து "ஆயனரே, அரசர் தங்களை அழைக்கிறார்" என்று தெரிவிக்கும் பொழுது ஓர் உருவம் அங்கிருந்து வெளிபட்டு அரண்மனையை நோக்கி விரைந்து செல்கின்றது.

அரண்மனை வாயிலை நெருங்கியதும் அவ்வுருவம் வாயில்காப்போனை நோக்கி "வாயிலோயே, நீர் அழைத்த பிரகாரம் ஆயனர் வந்துள்ளார என்பதை நும் அரச

னிடம் தெரிவி" என்றது. அவனும் அங்ஙனமே விடை பெற்று வந்து அவரை உள்ளே அழைத்துச் செல்கின்றான்.

ஆயனர் :—அரசே வணக்கம்! தாங்கள் அழைத்ததன் காரணம் யாது?

அரசன் :—ஆயனரே, வேலை பூர்த்தியாயிற்றோ?

ஆயனர் :—இல்லை, அரசே முகவெட்டு சரிவர அமைய மாட்டேனென்கின்றது. சீக்கிரம் முடித்து விடுகின்றேன்.

அரசன் :—சரி, சீக்கிரம், பணி முடியட்டும். நீர் செல்லலாம்.

[அவன் தன் குகைக்குச் சென்று விட்டான்.]

அச் சிற்பியின் பெயர் ஆயனர். அவன் ஆயர்குலத்திலுதித்து சிறு பிராயத்தில் ஆடுமாடுகளை மேய்த்துப்பின் சிற்பக்கலையிலே தேர்ச்சி பெற்றான். இவனுககு இருபதாம் பிராயத்தில் மணம நிறைவேறியது. தமிழைச் செவவனே கற்றுக் கொண்டான. அவனுக்கு இருபத்திரண்டாம பிராயத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவன எழில் வாயந்த உருவஙகள அமைத்தான். அதைக் கண்ணுற்ற அரசன் வியந்து கயிலைநாதனின் விக்கிரகம ஒன்றினை இயற்றுமாறு ஆயனனுக்குக் கட்டளையிட்டான்.

அதற்காக அவன் எட்டுவருடஙகள் முயன்றும உருவம் வெகு அழகாய் அமைந்தும முகவெட்டு ஏறபடவேயில்லை. உலகிலே ஒருவன உருவத்தைக் காணபது முகத்திலேயே. அவன் செயத உருவங்களின் முகங்களனைத்தும இவன் சிறந்த சிற்பி என்பதைக் காட்டும முகங்களாய விளஙகின. ஆனால உலகத்தைப் படைத்து இன்னமுது ஊட்டுவிக்கும் இறைவன் எழிலை அல்லது முகசசொரூபத்தைக்காண எவரால் இயலும? அவன் முயற்சிகள அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர் போல் வீணாகி அவனை வாட்டின. "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்பது அவனைப் பொருத்த வரையில் பொயயாயிற்று.

பால் போனற நிலவிலே அவன் யோசித்துக் கொண்டிருந்தான். பிறகு தன் வேலையில் முனைந்தான். அவன் அன்று காலையிலிருந்து உணவருந்தவில்லை, விளக்கு ஒளி மஙகி எரிந்து கொண்டிருந்தது. ஓர் உருவம உள்ளே நுழைந்தது. சிறிது நேரத்தில் பேச்சரவம கேட்டது. அது யாது? அவ்வுருவம யார்? அது அவனுடைய மனைவி கருபபாயியினுடையது. அச் சமபாஷணை பின்வருமாறு :—

மனைவி :—"எம்மாந்நேரமா இங்கேயே இருக்கே? காத்தாலேயிருந்து கஞ்சி கூட சாப்புடல்ல; பொயுது போவுது, தண்ணிகூடச் சாப்புடலே"

ஆயனர் :—பொழுது போனால் என்ன செய்யச் சொல்றே? இதை வைத்துக் கொண்டு அழமுடியவில்லையே.

அவள் :—'வேலை கடந்தா என்ன? சாப்புடவேணுன்னு சொல்லிச்சு. சாப்பிட்டுப பண்ணேன்'.

அவன் :—'எனக்குச் சாபபாடும வேண்டாம், ஒன்றும் வேண்டாம்'.

அவள் :—'சரி, ஏன்னமோ பண்ணு' என்று கூறிவிட்டு இல்லத்திற்குச் சென்று விட்டாள்.

அவன் மறுபடியும வேலையில் முனைந்தான். 'டக், டக்'கென்ற ஓசை கேட்டது. ஆனால் விளக்கின் ஒளி மஙகிக் கொணடே வந்தது. அங்ஙனமே அவன் உளளத்திலும பிரகாசம குனறிக்கொண்டே வந்தது. அவனுக்கு உலகமே வேம்பாயிருந்தது. அவன் இயறறிய சிலைகளில் இது ஒனறே அவன விருப்பத்திற்கிணஙகா நின்றது.

மூன்று இரவும் பகலும் கழிந்தன. நான்காம் நாள் அந்தி நேரம் பறவைகள் இன்னிசை எழுப்பிக் கொண்டிருந்தன. தூரத்தில் கோயிலின் மணி 'டணர், டணர்' என்று ஒலித்தது. பறவைகள் தங்கள் இல்லத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கையில் அவன் உயிரும் இம்மண்ணுலகை விட்டுப் பறந்து கொண்டிருந்தது.

அவள் தினமிருமுறை வந்து அவனை உணவருந்தும்படி வற்புறுத்தினாள். அவள் வற்புறுத்தல் வீணாயிற்று.

அவள் அன்று காலையில் சென்றவள்தான். அன்று மாலை ஏதோ வேலையிருந்தமையால் வரமுடியவில்லை. மறுநாள் காலைதான் சென்றாள்.

அவள் கண்டது என்ன? விளக்கு அணைந்திருந்தது. உளியும் சுத்தியும் அவனருகில் இருந்தன. ஆனால் அவள் வாழ்க்கையிலும் விளக்கு அணைந்து விட்டது. அவன் அச்சிலையை அணைத்தவாறே உயிர் துறந்திருந்தான்.

அவள் கதறினாள். என்ன பயன்?

செய்தி அரசனுக்குக் கிட்டியது. அவன் வந்து பார்த்தான். சிலையின் முகப்பாகம் உருபெறாமல் நின்றது. ஆனால் மற்றப் பாகங்கள் வெகு நேர்த்தியாக அமைந்திருந்தன. அவன் உள்ளத்தையே கொள்ளை கொண்டுவிட்டது. அக்கலைத் தியாகம்.

பின் அவன் ஆயனரின் உடலை அப்புறப்படுத்தி அவனுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளை ஆயனரின் குமாரனை குமரனைக் கொண்டே செய்வித்தான். அந்தச் சிலையையும் தன் அரண்மனைக்குக் கொண்டு சென்று விட்டான்..

மறுநாள் செய்த விளம்பரம் யாதெனில், 'எவன் என்னிடத்தில் உள்ள சிலையை பூர்த்தி செய்வானோ அவனுக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பேன்' என்பதாம். அவன அச்செய்தியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரப்பினான்.

பயனில்லை. அனைவரும் வந்து அச்சிலையைக் கண்ணுற்று வியப்பு எய்தினரேயன்றி எவராவது முன் வரவில்லை.

பின்னும் பத்து வருடங்கள் மறைந்தன. இப்பொழுது ஆயனரின் குமாரன், குமரனுக்கு இருபத்தோராம் வயது நடந்து கொண்டிருந்தது. அவன் தந்தையை விட விடாமுயற்சியும், திடகாத்திரமும் பொருந்தியவனாக விளங்கினான். அத்துடன் அவனும ஓர் சிற்பிதான். எழில்வாய்ந்த சிலை ஒன்று இயற்றினான் ஒன்றா? அல்ல, பல. தந்தையார் முடிக்காது விட்ட சிலையைப் பற்றியும் கேள்வியுற்றிருந்தான்.

அரசன் சிங்காதனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தான். அரண்மனை முழுவதும் பளபளப்பான சலவைக் கற்களால் நிறைந்திருந்தது. தூண்களிலும் சுவர்களிலும் சித்திர வேலைப்பாடுகள் தென்பட்டன. விளக்குகள் கம்பீரமாக ஊசலாடிக் கொண்டிருந்தன, சிஙகாதனத்திற்கு இருபது கெஜத்திற்கு முன்னால் வனப்பு மிக்க நடனமேடை ஒன்று தென்பட்டது.

பல்வேறரசர்கள் அமர்வதற்கும் மந்திரி பிரதானியர்களுக்கும், புலவர்களுக்கும் பல ஆசனங்கள் அவரவர்க்குரிய மதிப்போடு விளங்கின. மந்திரிகளும் மற்றும பலரும் வீற்றிருந்தனர், வாயில்காப்போன் வந்து "வாழிய, வேந்தே! தங்கள் ஆயனர் சிற்பியின குமாரர் குமரனும ஈண்டுவந்துள்ளார். தங்களைக் காணவேண்டுமாம். தஙகளுத்தரவு" என்று உரைத்து, அரச ஆக்ஞையைப் பெற்று, அவனை அழைத்து வந்தான்.

இளைஞன் :—"அரசே, தங்களைக் காண அலைகிறேன், மகாப் பிரபோ!"
அரசன :—ஆம் குமாரா நீ கொண்டு வந்துள்ள செய்தி யாது?
இளைஞன் :—என் தந்தையின் சிலையை முற்றுவித்தே காண்பிப்பேன்.
அரசன் :—அங்ஙனமாயின் இரண்டு திங்களுக்குள் முடித்துத் தருக.
இளைஞன் :—தங்கள் ஆக்ஞை; அரசே!

ஓர் திங்களும் கழிந்தது. பூர்ணச்சந்திரன் தன் வெள்ளொளியைப் பரப்பிக் கொண்டிருந்தான். அக்குமரன் அப்பொழுது வெளியே உட்கார்ந்து எதையோ ஆழயோசித்துக் கொண்டிருந்தான். "அடுத்த திங்களுக்குள் வேலை பூரணமாக வேண்டும்" என்று அவன் மனம் அவனுக்கு உணர்த்தியது.

அவன் எழுந்து சென்று அவன் தகப்பனைப்போல் வேலையில் முனைந்தான். முகம் வெகு பிரகாசமாய் தோன்றிக் கொண்டிருக்கையில்; என்ன? வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியுடைவது போல் அது பிளவு'படுகிறது. விளக்கு அணைந்தது. அவன் உள்ளம் உடைந்தது.

அவன் எழுந்தான்! சென்றான்! மறைந்தான். அவன் எங்கே? அவன் தான் அம்முனி.

உயிரைத் துறந்த தந்தை செய்தது தியாகமா? கலைக்காக உலகையே துறந்தது தியாகமா?

கோ. ஆண்டாள்.
5ம் வடிவம். பி. பிரிவு.

என் கதை

சிறுமிகளே, நான் யார் தெரியுமா? உலகை ஆளும உலோக அரசர், பாண்டவர்களைப்போல ஐவராவர். அவருள் யான் வீமனைபபோல விளங்குபவன். என் நிறம கரியதே ஆயினும என் உபயோகம் பெரியதும் போற்றத்தக்கதுமாகும். யான் இல்லாவிடில் நீங்கள் திண்டாடிப்போவீர்கள். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல்லார்க்கும் பயன்படுபவன் யான்; விலையின உயர்வையும் பளப்பளப்பான மஞ்சள நிறத்தையும் கருதி, அந்தப்பையனை நீங்கள் மூக்கிலும் காதிலும் அணிந்து கொண்டாலும் உபயோக மிகுதியை ஓர்ந்தால் எனக்கு அவன இணையே ஆகான். "உலோக அரசன்" என்ற பட்டம் எனக்கே உரியது.

நான் பூமியின் அடிப்பாகத்தில் கல், மண், கந்தகம் என்னும் என் நண்பர் மூவருடன் கலந்து உறவாடிப் புதைந்து கிடந்தேன். என்னுடைய உபயோகத்தைக்கண்ட மாந்தர் என்னையும என் நண்பருடன் சேர்த்துக் கொண்டு வந்து ஒரு பெரிய பாண்டத்தில் இட்டு, உலையில் வைத்துக் காய்ச்சினர். கந்தகம என்னும என் ஆருயிர் நண்பன சூட்டுக்கு அஞ்சி ஆவியாய மறைந்தான். மற்ற இருவரும் பயந்து நடுநடுங்கி என்னோடு ஒட்டிக் கொண்டனர். தொழிலாளிகள் அப்போதும் அவர்களை விடாமல எனனிடத்திலிருந்து பிரித்து விட்டார்கள். நட்பைப்பிரித்த பாவம அவர்களைச் சேரட்டும என்று நானும வாளாவிருந்தேன்.

பலவானுக்கு பயம் ஏது? யான் தனியனாயினும் தளராத வலிமை படைத்தவன். அவர்கள என்னைக் காய்ச்சி உருக்கி, அடித்து, ஒடித்து மடித்துச் செய்த துன்பங்கட்கெல்லாம் யான் ஈடு கொடுத்தேன. யான் வல்லாளனாய இருப்பதைக் கண்ட அவர்கள என்னை மெச்சி, கைவிடாமல் கையாளலானார்கள். என் நிறம் கருப்பாய இருப்பதற்கு யான் பலமற்றவனாகவும் இருந்திருப்பேனாயின் எவர் தான் என்னை மதிப்பார்! தொழிலாளிகள் என்னைப பல முறைகளால் காய்ச்சி வார்ப்பு இரும்பு, எஃகு, தேன் இரும்பு எனப் பலவகையாக்கினர். அந்நாள் முதல் யான்

இவ்வகைகளில் பல விதமாகப் பயன்பட்டு வருகின்றேன். விளக்குக் கம்பங்கள், தண்ணீர்க்குழாய்கள், தூண்கள் விட்டங்கள் முதலான பல உறுதியான பொருள்களும் என்னால் இயன்றவையே. யான் எத்தனை பெரிய ஆறுகளின் குறுக்கே பாலமாய் நின்று பயனளிக்கிறேன் தெரியுமா? அரம், இரம்பம், உளி, கத்தி, கத்திரிக்கோல், சம்மட்டி முதலான கருவிகள் என்னாலே அமைந்தனவாம். கேடயம், ஈட்டி, வாள், பீரங்கி முதலிய போர்க்கருவிகளும் என்னால் செய்யப்படுபவையே. கரண்டி, சட்டி, 'கெட்டில்' முதலிய வடிவங்களில் யான் இல்லந்தோறும் வாசம் புரிகின்றேன்.

அரத்தால் அராவப்பட்ட என் பொடிகளைக் கொண்டு வைத்தியர்கள் 'அயச்சிந்தூரம்', 'அயத்திராவகம்', என்னும் மருந்துகளை செய்கிறார்கள். இந்த உருவில் நான் உங்கள் வயிற்றுள்ளும் சென்று இரத்தத்தைச் சுத்தப்படுத்தி நல்ல பசியை உண்டுபண்ணிப் பலம் தந்து நன்மை புரிகின்றேன்." இளைத்தவன் இரும்பைத்தின்னக்கடவன்! என்னும் பழமொழியால் நீங்கள் என் சக்தியை அறிந்து கொள்ளலாம். தண்ணீர் என்ற அயோக்கியன் ஒருவன் மட்டும் எனக்கு உடன் பிறந்த விரோதியாய் இருக்கின்றான். அவனிடத்தில் யான் அகப்பட்டு விடுவேனானால் என் பலத்தையும் உருவத்தையும் சிதைத்து விடுவான். ஆனால் அவனிடமிருந்து தப்பவும் "வார்னிஷ்" என்ற போர்வை எனக்கு உண்டு. யான் எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கு இணையாவேன்.

"ஜாம்ஷெட்பூரில்" யான் கட்டியுள்ள தொழிற்சாலையைப் பாருங்கள்! அந்த அறிஞர் டாடா ஒருவரே என் பெருமையை உணர்ந்து பயன் பெற்றார். அந்தோ! அந்தப் "பொன்" என்னும் பையன் நான் ஏதோ தற்பெருமை பேசி, தம்பட்டம் அடிக்கிறேன் என்றும் அவனுக்கு நான் நிகராகேன் என்றும் இகழ்ச்சிக் குறிப்புடன் நகையாடுகிறான். அவனை நீங்கள் நம்பாதீர்கள். அவன் உங்களைத் தக்க வேளையில் கைவிட்டு விடுவான். சமயத்திற்குக் கையிலிருந்து நழுவி ஓடி விடுவான். அவன் செய்யும் ஜாலங்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.

By J. Philomena, Form V. A.

உழவும் உழவனும்

தொழில்களிலே சிறந்தது உழவெனில், உழவனுக்கு ஒப்பானவர் யார்? யாருமில்லை, ஏனெனில் "பழுதுண்டு வேறோர் பணிக்கு". உழவன் இருப்பதால் தான் தரை பச்சென்று தோன்றுகிறது. உலகின் வயிறு காயவதில்லை; தண்ணென்றிருக்கிறது. அதன் முகத்தில் வாட்டம் தோன்றவில்லை. ஒளி ஓட்டம் தோன்றுகிறது. உடலில் தளர்ச்சி தோன்றவில்லை, கிளர்ச்சி தோன்றுகிறது. மூப்பின் குறி இல்லாமல், இளமையின் குறி தாண்டவம் ஆடுகிறது. உழவனே உலகின் உயிர் நாடி. அவன் உழைக்கிறான், உண்டாக்குகிறான்; உண்டாக்கி உலகிற்கு உதவுகிறான். அவன் ஊட்ட உய்யும் உலகு. பஞ்சத்தை எதிர்க்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரன் அவன் தான். அவனிடம் தான் அப்பேயை ஓட்டும் கருவி (கலப்பை) இருக்கிறது. பார் முழுவதும் அவன் ஏர் முனையில் இருக்கிறது. அவனை உலகம் போற்றிப் புரத்தல் செய்யின் உலகம் உய்யும் வழி ஏற்படும்.

நம் நாட்டிலே உழவு நன்கு நடைபெறவே இல்லை. உழவன் ஓட்டாண்டியாய் இருக்கிறான். நிலத்தைச்சீர் செய்ய அவனிடம் பணமேது? தக்க கருவியேது? தினமும் காலையில் எழுந்து கலப்பையை எடுக்கிறான்; தள்ளாடி நடக்கும் தனதிரு மாடுகளையும் தட்டித்தட்டி வயலுக்கு ஓட்டிச் செல்லுகிறான், அவற்றைத் தள்ளிக் கொண்டும், கூவிக்கொண்டும், கலப்பையால் கோடுபோட்டுக் கொண்டு நிலத்தை வலம் வருகிறான். பின்பு விதைத்து விடுகிறான். கிணறு வைத்திருந்தால், நாளெல்

ஸாம் மாய்ந்து மாய்ந்து நீர் இறைப்பான். பின்பு புற்பூண்டு புதர்கள் செழிப்பாய்ப் பயிரைக் காட்டிலும் ஓங்கும்; பூச்சியும் இறங்கும். விவசாய இலாகாவில் குறைந்த விலைக்குப் பூச்சி போக்கும் மருந்து கிடைக்குமென்று ஏழெட்டு முறை நடையாய் நடப்பான். பரிதாபம்! பூச்சி தின்றது போக மிகுந்ததில் கிடைத்த பத்தரை மரக்கால் நெல்லைத் தனக்கு எடுத்துக் கொண்டு, வைக்கோலை அவன் கணக்காக மாடுகளுக்குப்போடுவான். இதற்குள் அவனுடல் ஓடாய் ஒடுங்கிவிடும், வேலையில் சோர்ந்துபோவான்.

செல்வர்களே! உங்கள் முதலை அடக்கமாகச் சேமநிலையத்தில் சேமித்து வைத்துப பயனென்ன? நீங்களும் தீவிரமாக உழவில் ஈடுபடுங்கள், கூட்டுறவு முறையில் பயிர் செய்ய முயலுங்கள், பயிலுங்கள். இந்தியா எங்கும் இப்படியே செய்யுங்கள், தேவையானதைப் பற்றி அரசாங்கத்தாரிடம் கேளுங்கள. அரசாங்கமும் கொடுக்கவே காத்து இருக்கிறது. ஆங்காங்கே ஊற்றுள்ள இடங்களில் கிணறுகளை வெட்டுங்கள். மின்சாரத்தால் நீர் இறைக்கும இயந்திரத்தை வைத்து நீர் இறையுங்கள; அரசாங்கத்தாரிடமிருந்து நிலத்தை உழும் இயந்திரத்தை வாங்கி, ஆழ உழுங்கள். பயிரிடுஙகள், மேனுட்டுப பயிர் முறைகளைக் கையாளுங்கள். தக்க வேளைகளில் ஆவன புரியுஙகள். இதற்கு ஏழைக் குடியானவரை ஏராளமாகப் பயன் படுத்துங்கள்.

நம் நாடு நலமுறும். கி. பொன்னம்மாள்

ஆறும வடிவம். பி. பிரிவு

தேனீத் தொழில்

குடிசைத் தொழிலிலே விவசாயிகளுக்கும், பிறர்களுக்கும் அதிக வருவாய் தரக்கூடிய தொழில்களுள் தேனீ வளர்த்தலும் ஒன்ருகும. தேன் என்று கூறும் போதே நம நாவில் நீர் ஊறுகிறது; இதைபபோலவே தேனீத் தொழில் என்னும் போதே அது லாபமும், இன்பமும தரும் தொழில் என நமது நாடு பின்னெரு காலத்தில் உணரும் என்பதை நான் நம்புகிறேன. இத் தொழிலில் ஈடுபடுபவர்கள அதிகச் சிரமமில்லாமல் செயயக்கூடும. இதற்கு அதிக முதலும் தேவையில்லை. வெளி நாடுகளில் அனேக விவசாயிகளும, மற்றும் பலரும் இத்தேனீ வளர்ப்புத் தொழிலால் ஏராளமான வருவாயையும், லாபத்தையும் அடைந்துள்ளனர் என்று பலவாறு அறிகின்ருேம்.

பூஞ்சோலைகளும், முப்போகம் விளை நிலங்களும், வளம் செறிந்த நெடிய மலைகளும், அடர்ந்த வனங்களும சூழப்பெற்ற நம நாட்டில் இத்தொழிலுக்கு அதிக வசதியிருக்கின்றது. இவ்விடங்களில் எண்ணிறந்த பூக்கள் உள்ளன. இப்பூக்கள் சொரியும் தேனைச் சேகரிக்க நாம் முற்பட்டால், நமமிடம் செல்வம் சேரும என்பது திண்ணம். இயற்கை அன்னை அளிக்கும அமுதத்தை அடைய வழியன்றி யல்லவோ நாம் இருக்கின்ருேம். தேன் எங்ஙனம உடல் நலம் பெருகி, பிணியைப் போக்குகின்றதோ, அஙஙனமே தேனீத் தொழில் பொருளாதாரத்தைப் பெருக்கி, வறுமைப் பிணியை அகற்றுகின்றது.

நமது நாட்டிலே இயற்கையாகத் தேனீ வைக்கும் அடையை எடுத்துத் தேனீ முட்டைகள, குஞ்சுகள் முதலியவைகளை நசுக்கி, கசக்கிப் பிழிந்து தான் தேன் எடுக்கிருர்கள். அம்முறை அநாகரீகமானது. தேனீக்களை நமது தோட்டங்களிலேயே வளாத்து, அவை சேகரிதது வைக்கும தேனிற் பெரும்பகுதியை அவைகட்குச் சிறிதும் வருததமுண்டாகாதபடி எடுத்துக்கொள்வதே சிறந்த முறையாகும். தேனீக்களில் சிறந்தவற்றையே, அதாவது நிரம்பத தேனைத் தரும் தேனீக்களையே வளர்த்தல் வேண்டும.

தேனீக்களை வீட்டில் வளர்க்க வேண்டுமானால் அதற்காகத் தேன் கூட்டைத் தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு தேன் கூட்டிலும் ஒரு இராணி ஈ இருக்கும். மேலும் வேலை செய்யும் தேனீக்கள், சோம்பேறித் தேனீக்கள் என இரண்டு வகையான தேனீக்கள் இருக்கின்றன. வேலை செய்யும் தேனீக்களே தேனைச் சேகரிப்பவை. மற்றவை சேகரிக்கும் தேனைக் குடிப்பவை. இராணி ஈ தான் கூட்டுக்கு மிக முக்கியமானதும், ஆதாரமானதுமாகும்.

முன்பு இக்கூடுகளிலுள்ள அடைகளைப் பிழிந்தே தேன் எடுத்து வந்தார்கள். இப்போது தேன் எடுப்பதற்காக ஒரு கருவியை உபயோகிக்கிறார்கள். அக்கருவியில் தேன் அடையை வைத்து, அதில் வைத்திருக்கும் கைப்பிடியைச் சுற்றினால் தேன் அடையிலுள்ள தேன் அக்கருவியின் அடியில் சேருகிறது. அதை எளிதில் எடுத்துக் கொள்ளலாம். தேனீயை வளர்த்தால் அதை நாள்தோறும் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் தேனீக்களுக்கு மிகக்கொடிய சத்ருக்கள் எறும்புகள். இவை அக்கருவியில் உள்ள தேனை எல்லாம் அருந்தி விடுகின்றன. ஆகையால் தேன் கூட்டில் எறும்பு ஒன்று கூடப் போகாதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தாரும், தேசபக்தர்களும் இத்தொழில் நம நாட்டிற்கு ஏற்றது எனக் கண்டு, ஆங்காங்கே தேனீத் தொழிற் பண்ணைகளை வைத்து ஆராய்ந்து வருகின்றனர். இவ்வரிய தொழிலுக்கு முதலும் இல்லை, செலவுமில்லை. ஒருவன் இத்தொழிலைக் கருத்துடன் செய்வானேயானால் அவன் இதன்மூலம் ஆண்டொன்றுக்கு நானூறு, ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கலாம். ஆகவே இது நம நாட்டு விவசாயிகளுக்கு ஜீவாதாரத் தொழில் என்றாலும் மிகையாகாது. இவை தவிர அவன் தேனீக்களிடமிருந்து ஊக்கம், சுறுசுறுப்பு, ஒழுங்கு, தற்காப்பு, சிக்கனம் போன்ற நற்பண்புகளை பெறலாம்.

நம நாட்டில் பற்பல இடங்களில் பலர் ஆசிரமங்களையும், சங்கங்களையும் அமைத்துக் குடிசைத் தொழில்களை விருத்தி செய்துவரும் வசதிகளைப் பற்றியும், அவற்றின் அனுகூலங்களைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துரைத்து வருகின்றனர், படித்த ஆண், பெண்கள் யாவரும் நம் நாடு மிக விரைவில் முன்னேற்றமடைந்து. உலக நாடுகளிடையே முதன்மை நாடாக விளங்குமென்பது திண்ணம். இத்தொழிலும் தேசத்தொண்டில் ஒன்றாகக் கூறப்படும். ஆகவே வருங்காலப் பெருவாழ்வில் உள்ள ஆண் பெண் என்ற இருதிறத்தாரும், இதைப்போன்ற தொழில்களை அறிந்து, அதில் ஈடுபட்டுச் செய்வது தேசத்தின் நலனேயாகும்.

பேராசை பெருநஷ்டம்

ஒரு ஊரில் ஒரு பேராசைக்கார அண்ணாமலை இருந்தான். அவன் பணத்திற்காக எதற்கும் உட்படுவான் என்று அறிந்த ஒரு வெளியூரான் ஒருவன், அவனிடம் சென்று "ஐந்து மைல் தூரத்தில் ஒரு பாம்புப் புற்று இருக்கிறது. அதைப் பல ஆண்டுகளாக ஜனங்கள் வணங்கிக் காணிக்கை செலுத்தி வருகிறார்கள். ஆகையால் அதில் நிறையப் பணம் இருக்கும்" என்று சொன்னான். அப்படியானால் புற்றைக் கலைத்து அதை நீ எடுத்துக்கொள்ளக் கூடாதா என்று கேட்டான். அண்ணாமலை "புற்றைக் கலைத்தால் கண்கள் போய்விடாதா?" என்றான். "இதெல்லாம் மூடப் பழக்கங்கள்! சரி, இதை யாரிடமும் சொல்லாதே என்று ஐந்து ரூபாயை அண்ணாமலை அவனுக்குக் கொடுத்தான்.

மறுநாள் காலை அண்ணாமலை பத்து கூலியாட்களுடன்போய் அந்தப் புற்றைக் கலைத்து பாம்புகளையெல்லாம் துரத்தச் செய்தான். ஆனால் அதில், ஒரு பாம்பு ஒரு கூலியாளைக் கடித்து விட்டதால் அவனுக்கு நஷ்டஈடு கொடுத்தான்.

அதில் ஏறக்குறைய மூன்று ரூபாய்க் காலணாக்கள் தானிருந்தன. வெளியூரா னுக்கு கொடுத்ததற்கும், கூலியாளின் பரிசாகக் கிடைத்தது மூன்று ரூபாய்தான்! இந்தத் தோல்வி அண்ணாமலைக்கு நல்ல புத்தியைக் கற்பித்தது. ஆகையால் நாம் கிடைத்தது போதுமென்றிருத்தல் வேண்டும். மேலும் தேவை என்னும் ஆத்திரக் குணத்தை அறவே ஒழிக்க வேண்டும். பேராசைப்பட்டால் பெரு நஷ்டம் உண்டா கும் என யாவரும் அறிதல் அத்யந்த அவசியமாகும்.

By C. Sabina, IV Form B.

நட்பின்பம்

நாம் அடையக் கூடிய இன்பங்களில் நட்பின்பம் போல அரியது ஒன்றுமில்லை. துறக்க இன்பமும் இதற்கு நிகராகாதென்பர். நாம் மேற்கொண்ட செயல்களுக்கு நண்பர் பெருந்துணையாவார். ஆனால் பண்புள்ள நண்பர்களையே நாம் பற்ற வேண்டும். நிறைகுண நண்பர் நட்பு வளர் பிறை போல் வளரும். அது கரும்பை நுனியினின்று தின்றாற் போலிருக்கும். புல்லர் நட்பு தேய்பிறை போலும் கரும்பை அடியிலிருந்து தின்றாற் போலுமிருக்கும். அருட்பெரியார்கள இயற்றிய நூல்கள் கற்கக் கற்கப் புதுப் புது நயமும, பயனும் அளிப்பன போலப் பண்புடையார் நட்பும பழகப் பழக இனிதாகும. இத்தகைய நண்பர் உடனுறைந்து அடிக்கடிக் கூடிப் பழகுதல் வேணடாம்; அவர் உள்ளம் ஒனறு பட்டு எங்கிருப்பினும் அன் புணர்ச்சி மிகுந்து கொண்டிருக்கும். புணர்ச்சியினும் உணர்ச்சியே நட்பை உறு திப்படுத்தும். கேவலம் நகையுடன் புகழ் மொழிகளால் ஒருவரையொருவர் துதி செய்வது நட்பன்று. வெறும் வாய்ப் பந்தலாற் பயனில்லை. நெஞ்சில் அன்பிருக்க வேண்டும். உள்ளொன்றி மனமகிழப பழகவேண்டும். அறவழி தப்பி மிகை செய்தால் நன்றாக இடித்துப் புத்தி சொல்லி நல்வழியில் திருப்புதலே நட்பின் கடமை.

அழி செயல்களினின்று நீக்கி நல் வழியில் நடக்கச் செய்து நண்பனுக்கு ஒரு கேடுற்றபோது, தனக்கு வந்த துன்பமென்று தானும் வருந்தி, அவையில் ஆடை அவிழ்ந்தால் உடனே அதை எடுத்து உடுத்திக் கொள்ளக் கை எப்படிப் பாயுமோ அபபடி நண்பனுக்குற்ற இடுக்கணைத் தீர்ப்பதே உண்மையான நட்பின் இலக் கணம். நட்பின் அரியணை எஙகுளது? எவ்வித வேறுபாடு மின்றி அனபும் அறமும் நிலையாக ஊனறித் திணமை பெறும் உள்ளத்தில் நட்பெனனும் அரசி வீற்றிருப்பாள. அந்த அன்பு சேர்க்கையில் முகமன், அறிமுகம என்பன இரா. பின்னால் வருத்தத்தைத் தரக்கூடிய உள்ளஞ் சிறுகும காரியங்களைச் செய்ய வேண்டாம். அல்லவிற் கை விடடோடும் நண்பரைக் கொள்ளற்க, கெடுங் காலைக் கைவிடுவார் நட்பை நினைத்தாற் கூட நெஞ்சு சுடும். அத்தகைய மூடர் நட்பை ஒரேயடியாக ஒழிபபதே ஒருவருக்குப் பெரிய ஊதியம். நேசஞ் செய்த பின் மோசஞ் செயபவரின் நட்பு பெருகுவதினும் அருகுதல் நன்று. அததகையோர் பயனிருந் தால் நயப்பர். கையிலைத்தாள விட்டு நீப்பர். கைபபொருள பற்றும் தீயர்க்கும், வஞ்சனையாகத் திருடும் கள்வர்க்குமே அவர்களை ஒப்பிடலாம்.

